நூல்களை ஏற்றுக்கொள்ளலாம், எவற்றைத் தள்ளலாம், எவை புதுமையாக உள்ளன, எந்தளவிற்கு உதவி செய்யலாம் என்று கண்டறிந்து அதற்கேற்றபடி உதவி செய்ய பரிந்துரை செய்கிறார்கள். அதை அரசு ஏற்று அதற்கு ஓரளவு உதவி செய்துகொண்டு வருகிறது.

தஞ்சை மருத்துவ மனை

*186 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செயது கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலுள்ள பி வகுப்பு அறைகளில் குளிக்கும் அறைகளை இணைத்திடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தில் குடிநீர் வழங்கு திட்டங்கள்.

*187 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தில் குடிதண்ணீர் வாரியத்தின் மூலமாக 1972-73, 1973-74 ஆகிய வருடங்களுக்கு எத்தனை கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு அல்லது வழங்கப்பட உள்ளது.

(இ) அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 1972-73, 1973-74 ஆகிய ஆண்டுகளில் திட்டங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. வரப்போகிற நிதியாண்டுகளில் திட்டங்களை எடுத்துக்கொள்ள முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

திரு. த. சோனையா: சிவகங்கை பகுதி தண்ணீர் வறட்சியான பகுதி. அங்கு குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் கிராம மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அரசு அந்தப் பகுதிக்கு வருகிற ஆண்டிலாவது குடிதண்ணீர் கொண்டு வருவதற்குச் செயல்பட இருக்கிற திட்டங்களை விரைவில் கொஞ்சம் வேகமாகக் கொண்டுவர முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : வறட்சியான சிவகங்கைப் பகுதி பற்றி உறுப்பினர் அவர்கள் வலியுறுத்திச் சொல்கிறார்கள். வறட்சி குறைவாக இருக்கிற திருப்புவனம் பகுதிக்கும் குடிதண்ணீர் அவசியம் வேண்டுமென்று கருதுகிறார்கள். அதேபோல் தமிழ் நாட்டிற்கு முழுவதும் த்திட்டங்கள் பரவலாக தேவைப் படுகிறது. அதில் சிவகங்கை ஊராட்சி